# உள்ளாட்சியில் நல்லாட்சி காணும் திராவிட மாடல் ஆட்சியில் - திருப்பூர் மாநகராட்சியில் நான்காண்டு திட்டப்பணிகள்!



திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டுகளில் சேதமடைந்துள்ள சாலைகளில் 745 கி.மீ. தார் சாலைகள் செப்பனிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 270 கி.மீ. தார்சாலைகள் ரூ.167.00 கோடி மதிப்பீட்டில் செப்பனிடும் பணி நடைபெறுகிறது.



மாநகராட்சி பள்ளிகளில் புதிதாக 154 வகுப்பறைகள் மற்றும் 124 கழிப்பறைகளும் கட்டப்பட்டு மாணவ, மாணவியர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் 7 பள்ளிகளில் கூடுதல் 26 வகுப்பறைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.



கோவில்வழி பகுதியில் புதிதாக பேருந்து நிலையம் சுமார் ரூ.34.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு 22.07.2025 இன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்பணிக்கப்படுகிறது.



நொய்யல் நதிக்கரை பலப்படுத்தப்பட்டு பல்வேறு இடங்களில் அழகுப்படுத்தி பூங்காக்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது. மேலும் ரவுண்டானாக்கள் மற்றும் தடுப்புச் சுவர்கள் அழகுபடுத்தப்பட உள்ளது.



நமக்கு நாமே திட்டத்தில் மக்கள் பங்களிப்பில் திருப்பூர் மாநகராட்சி தொடர்ந்து முதலிடம் வகித்து வருகிறது. தற்போது வரை 120 பணிகள் ரூ.25.32 கோடி மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் முடிவடைந்து உள்ளது.



திருப்பூர் மாநகராட்சியின் முருகம்பாளையம் பகுதியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் எரிவாயு தகன மேடை கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும், வாவிபாளையம் பகுதியில் ஒரு எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது.



பல ஆண்டுகளாக மழைநீர் வெளியேற வழியில்லாத தாழ்வான பகுதிகளில் 12 மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் ரூ.42.36 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் 5 மழைநீர் வடிகால் அமைக்க நிர்வாக அனுமதி பெறப்பட்டு உள்ளது. மற்றும் மழைநீர் வடிகால்களை புணரமைக்க வார்டு ஒன்றிற்கு ரூ.30.00 இலட்சம் சிறப்பு நிதி ஒதுக்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.



பொது சுகாதாரத்தை பேணிக் காத்திட புதிதாக திறக்கப்பட்ட 24 நகர்ப்புற நலவாழ்வு மையங்களைத் தொடர்ந்து 11 துணை சுகாதார மையங்கள் மற்றும் 3 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு உள்ளது. மேலும், ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் 5 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதல் அறைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.




நஞ்சப்பா ஆண்கள் மேல்நிலைபள்ளி வளாகத்தில் ரூ.2.61 கோடி மதிப்பீட்டில் நூலகம் மற்றும் அறிசார் மையக்கட்டிடம் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. இங்கு போட்டித்தேர்வுக்குத் தயாராகும் மாணவ மாணவியருக்கு பிரத்யேக இலவச பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் புதிதாக முதல்வர் படிப்பகம் அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது.




திருப்பூர் மாநகராட்சியின் நிர்வாக வசதிக்காகவும் மற்றும் மாநகாட்சி எல்லை விரிவாக்கம் போன்றவற்றை கருத்தில் கொண்டு எதிர்கால வளர்சிக்கேற்ப தொலைநோக்கு பார்வையுடன் அனைத்து வசதிகளுடன் திருப்பூர் மாநகராட்சி மைய அலுவலகம் ரூ.46.80 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் தாராபுரம் சாலையில் அமைக்கும் பணிகள் துவங்கப்பட்டுள்ளது.



நான்காவது குடிநீர் திட்டப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு, 66 மேல் நிலைத் தொட்டிகளில் நீரேற்றப்பட்டு 5 நாள் இடைவெளியில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் கூடுதலாக மேல்நிலை தொட்டிகளில் நீரேற்றம் செய்து, விநியோகம் செய்வதை கண்காணிக்க 70 SCADA கருவி பொருத்தும் பணிகள் முடிக்கப்பட்டு, விரைவில் குடிநீர் திட்டம் முழுவதுமாக மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். நான்காவது குடிநீர்த் திட்டம் குடிநீர் குழாய் பதிக்கப்படாத பகுதிகளுக்கு குழாய் பதிக்கும் பணிகள் ரூ.48.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.



புதிதாக ஐந்து உயர்மட்ட பாலங்களில் தந்தை பெரியார் நகர் பாலம் மற்றும் சங்கிலிப் பள்ளம் ஓடை பாலம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது, மீதமுள்ள ஈஸ்வரன் கோவில் பாலம் மற்றும் நடராஜ் தியேட்டர் பாலம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் லக்ஷ்மி நகர் மற்றும் பூம்பாரை பகுதிகளை இணைக்க புதிதாக ஒரு உயர்மட்டப் பாலம் ரூ.3.69 கோடி மதிப்பீட்டில் பணிகள் துவங்கப்பட்டுள்ளது.







திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் புதிதாக 13,436 எண்ணிக்கையில் ரூ.17.52 கோடி மதிப்பீட்டில் எல்இடி தெரு விளக்குகள் பொருத்த வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியின் மூலம் 9971 புதிய தெருவிளக்குகள் பொருத்தப்பட்டு உள்ளது. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.



குப்பையில்லா மாநகராட்சியாக மாற்றிட பல்வேறு வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு தினசரி 750 டன் சேகரம் வெளியேற்றப் பட்டு வருகிறது. மேலும் புதிதாக இரண்டு குப்பைகளை தரம் பிரிக்கக் கூடிய MRF நிலையங்கள் மற்றும் 200 டன் BIO CNG PLANT அமைக்கப்பட உள்ளது.



விடுபட்ட பகுதிகளுக்கு முதற்கட்டமாக ரூ.190.19 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் துவங்கப்பட்டுள்ளது.

**11.08.2025 இன்று திருப்பூர் மாவட்டத்தில் புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்தும், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தும், பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு வருகைதரும்...**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# கழகத் தலைவர்

அவர்களை

## வருக! வருக!! என வரவேற்கும்,

# ந.தினேஷ்குமார் MIB

திருப்பூர் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர்
மேயர் - திருப்பூர் மாநகராட்சி